சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

**முன்னிலை : திருமதி.A.பர்சத் பேகம் பிஏ.எம்.எல்.,**

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 -ம் நாள், திங்கட்கிழமை.

I.A.No.1/2025

in

H.M.O.P.No.33/2024

கல்யாணி ..........மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

ஜெயகணேஷ் --- எதிர்மனுதாரர்/மனுதாரர்

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 06.10.2025 தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.அங்கப்பன் அவர்களும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அனந்தசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது, மாதவீட்டுவாடகை, உணவு, உடைக்கு மாதம் ரூ.12,000/-மும் குழந்தைக்கான உணவு உடை மற்றும் மருத்துவச்செலவுகள் என மாதம் ரூ.18,000/-மும் மொத்தம் ரூ.30,000/-த்தை இடைக்கால மாத ஜீவனாம்சமாகவும், மேலும் வழக்கு நடத்துவதற்கான செலவீனமாக ரூ.30,000/-த்தையும் மனுதாரரின் கணவரிடமிருந்து வசூலித்து தரும்படி உத்தரவிட வேண்டி பிரிவு 24 இந்து திருமண சட்டப்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் -**

இந்த மனுதாரர் அசல் மனுவின் எதிர்மனுதாரர். வழக்கு விவரங்கள் மனுதாரருக்கு

நன்கு தெரியும். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 16.05.2019 ம் தேதி திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தார். திருமணத்திற்கு பிறகு திருநெல்வேலியில் உள்ள மருத்துவமனையில் பணிபுரிவதாகவும் அவருக்கு பாத்தியப்பட்ட திருநெல்வேலி பாளையங்கோட்டை தில்லை கூத்தனார் தெருவில் உள்ள வீட்டில் வசிப்போம் என்று கூறியதாலும் மனுதாரருடைய பெற்றோர் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து பெற்றோர்கள் சம்மதத்தின் பேரில் இரு வீட்டு பெரியோர்கள் முன்னிலையில் இந்து சமய முறைப்படி திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எதிர்மனுதாரருடைய பெற்றோர்கள் வற்புறுத்தலின் பேரில் மனுதாரருடைய பெற்றோர்கள் அவர்கள் சேமிப்பு போக அக்கம் பக்கத்தினரிடம் கடன் பெற்று 15 பவுன் தங்க நகைகளையும் 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களையும் கொடுத்துள்ளார்கள். திருமண செலவுக்காக எதிர்மனுதாரர்கள் 2 லட்சம் பணம் வற்புறுத்தி வாங்கிக்கொண்டார்கள். மேற்படி வரதட்சணை பெற்ற எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மருத்துவமனையில் உயர் பதவியில் இருக்கும் தங்களின் மகனுக்கு 15 பவுன் நகை பத்தாது. மேலும் 5 பவுன் நகை வேண்டும் இல்லையென்றால் திருமணம் நடக்காது என்று கூறியதும் மனுதாரரின் பெற்றோர்கள் அதிர்ச்சியடைந்து அவ்வளவு வரதட்சணை தற்போது தரமுடியாது திருமணம் முடிந்த பின்னர் சிறிது காலம் கழித்து கேட்ட வரதட்சணையை கூறி சமாதானம் செய்து திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து 1 வார காலத்தில் எதிர்மனுதாரரின் வீடான திருநெல்வேலி தில்லை கூத்தனார் தெருவில் உள்ள அவரது வீட்டில் மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்கள். அப்போது எதிர்மனுதாரருடன் சரிவர பேசாமல் அடிக்கடி எரிச்சலுடன் நடந்து கொண்டதால் திருமணமான ஒரே வாரத்தில் திருநெல்வேலியில்

வேலை கிடைக்கவில்லை ஆகையால் ஓசூரில் தான் வேலை கிடைத்துள்ளது. அங்கு பணிக்கு செல்லவேண்டும் என்று கூறியதால் அதை நம்பி மனுதாரரும் ஓசூருக்கு செல்ல சம்மதம் தெரிவித்தார். ஓசூருக்கு சென்றபிறகு எதிர்மனுதாரருடைய சகோதரரி பெங்களூரில் வசிப்பதாலும் எதிர்மனுதாரரின் தாயார் அடிக்கடி தன்னுடைய மகள் வீட்டிற்கு அடிக்கடி சென்று வர வசதியாக இருக்க வேண்டுமென ஓசூருக்கு சென்றது தெரிந்தது. திருநெல்வேலியில் பணி பெற்று அங்கு தான் வாழ்க்கை நடத்துவதாக கூறிவிட்டு இந்த மனுதாரரை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் பெங்களூரில் பணி கிடைத்ததாக கூறி கொடுத்த வாக்குறுதியை மீறி ஓசூரிலியே குடும்பம் நடத்த ஏற்பாடு செய்துள்ளார் என்ற உண்மையை அறிந்த மனுதாரர் அதிர்ச்சியடைந்தார். ஓசூர் சென்ற பிறகு எதிர்மனுதாரருடைய நடவடிக்கையில் மாற்றம் இல்லை. குடும்ப செலவுக்கு பணம் கொடுக்காமலும் மனுதாரருடன் சரிவர பேசாமலும் இருந்து வந்துள்ளார். மனுதாரருடைய மாமியார் அனைத்து வீட்டு வேலைகளையும் மனுதாரரையே செய்ய வைத்துள்ளார்.அனைத்து பணிகளையும் முடித்து விட்டு ஓய்வு எடுக்க சென்றாலும் 5 பவுன் கூடுதலாக நகை போட வக்கில்லாதவளுக்கு ஓய்வு தேவையா வீட்டு வேலைகளை நீதான் செய்ய வேண்டுமென்று கொடுமைப்படுத்தினார். மனுதாரர் தனது மாமியாரின் நடவடிக்கைகளை எதிர்மனுதாரரிடம் கூறியபோது மனுதாரரின் பெற்றோரிடமிருந்து மனுதாரரின் மாமியார் கேட்ட 5 பவுன் நகைகளை வாங்கி வா என்றுகூறினார். பின் தன் தாயார் சொன்னபடி நடந்துகொள்ள வேண்டும் இல்லாவிட்டால் உன் தந்தை வீட்டுக்கு சென்றுவிடு என கூறி மனுதாரர் மனுதாரரை மனதளவிலும் உடலளவிலும் கொடுமை செய்தார். பெற்றோருடன் செல்போனில் பேசுவதையும் எதிர்மனுதாரர் தடுத்து இங்கு நடந்த சம்பவங்களை நீ உனது பெற்றோரிடம் சொன்னால் நீ உன் வீட்டிலேயே வாழ வெட்டியாக

வாழ வேண்டியது தான் என்று மிரட்டினார். மேலும் ஸ்மார்ட் போன் வைத்திருந்த மனுதாரரிடம் நீ உன் பெற்றோரிடம் வீடியோ கால் பேசக்கூடாது . எப்போது 5 பவுன் நகை வாங்கி வருகிறாயோ அப்போது ஸ்மார்ட்போன் பயன்படுத்து என்று கூறினார். எதிர்மனுதாரரின் சகோதரி குடும்பத்துடன் வரும்போது அனைத்து பணிகளையும் செய்யச்சொல்லி வற்புறுத்தினார். திருமணமான 40 வது நாள் மனுதாரர் பெற்றோருடன் பேசுவதை அறிந்த எதிர்மனுதாரர் மனுதாரரை ஆபாசமான வார்த்தைகளால் பேசி நீ செல்போனில் பெற்றோருடன் பேசுகிறாயோ யாருடனோ பேசுகிறாயோ என சந்தேகப்பட்டு மனுதாரரைஅடித்து செல்போனை பிடுங்கி வைத்துக்கொண்டார். அவருடைய தந்தை வீட்டிற்கு வந்தபோது மனுதாரர் கர்ப்பமாக இருப்பதை அறிந்த மனுதாரரின் தந்தை ஓசூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதை அறிந்த எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு மனுதாரரை பார்க்க வந்தார். மருத்துவர் அதிக பணிகள் செய்ததால் உடல் பலவீனமாக இருந்ததாகவும் அதனால் ஓய்வு தேவை என்று அறிவுரை கூறினார். எனவே மனுதாரரை எதிர்மனுதாரர் மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். இதனை அறிந்த எதிர்மனுதாரருடைய பெற்றோர் எங்களிடம் கேட்காமல் எப்படி அழைத்துக்கொண்டு செல்லலாம் என்று மனுதாரரிடமும் அவரது தகப்பனாரிடமும் செல்போனில் தொர்பு கொண்டு உடனடியாக ஓசூரில் கொண்டு வந்து விடவேண்டும் இல்லையென்றால் உன் மகள் இங்கு வாழ முடியாது என்று மிரட்டினார்கள். பின்னர் மனுதாரரின் பெற்றோர் சமாதானம் பேசி கர்ப்ப காலத்திலேயே மனுதாரர் அவரது பெற்றோர் விட்டில் இருக்க எதிர்மனுதாரரும் அவரது பெற்றோரும் சம்மதம் தெரிவித்தனர். பின்னர் தலைப்பொங்கல் சீர் வரிசை கொடுக்க எதிர்மனுதாரரின் பெற்றோர் வற்புறுத்தி கேட்டு மனுதாரரின் பெற்றோர் சம்மதம் தெரிவித்து மனுதாரரை அழைத்துக்கொண்டு

திருநெல்வேலியில் உள்ள தில்லை கூத்தனார் தெருவில் உள்ள எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றார். பொங்கள் சீர் வரிசை பொருட்களை எதிர்மனுதாரரின் பெற்றோர் வற்புறுத்தலின் பேரில் கொடுத்தார்கள். அதனை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் பிச்சைக்காரத்தனமாக சீர் வரிசை கொண்டு வந்திருக்கீங்க ஏற்கனவே தர வேண்டிய மீதம் உள்ள 5 பவுன் தர வக்கில்லை என்று கூறி அவமானமாக பேசினார்கள். பொங்கல் அன்று எதிர்மனுதாரர் மனுதாரருடன் இருக்காமல் அவருடைய பெற்றோருடன் இருந்தார். பொங்கல் கழித்து ஒரு வாரத்தில் வளைகாப்பு நடத்த மனுதாரருடைய பெற்றோர்கள் எதிர்மனுதாரரிடம் கேட்டபோது அதற்கு ஒப்புக்கொண்டார்கள். மனுதாரரின் கணவரின் பெற்றோர்கள் கேட்ட உணவு வகைகளை சேர்க்கவில்லை என்றும் நகை போட வக்கு இல்லாதவர்கள் என்று உறவினர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தினார்கள். குழந்தை பிறந்த பிறகு எதிர்மனுதாரரிடம் தெரிவித்தபோது நகை போட வக்கு இல்லாதவங்க குழந்தை பிறந்தா என்ன எப்படி இருந்தா என்ன என அலட்சியமாக பேசினார்கள். பின்பு பெரியோர்கள் சமாதானம் செய்த பின்பே குழந்தையை வந்து பார்த்து விட்டு உடனடியாக ஓசூர் செல்ல வேண்டும் என்று கூறி சென்றுவிட்டு அதன் பிறகு வரவில்லை. குழந்தை பிறந்து பெயர் சூட்டும்விழாவிற்கு மீதமுள்ள நகை கொடுத்தால் தான் வருவதாக கூறி விட்டு வரவில்லை. அன்றிலிருந்து மனுதாரரும் அவர் பெற்றோரும் எதிர்மனுதாரரை சேர்த்து வைக்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிப்போனது. 2022 செப்டம்பர் மாதம் மனுதாரரை அவரது கணவருடன் சமாதானம் செய்து ஓசூருக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எதிர்மனுதாரர் குழந்தைக்கு பால் வாங்க பணம் கொடுக்காமல் இருந்து குழந்தை அப்பா என்று அழைத்தால் குழந்தையை அடிப்பதை வழக்கமாக கொண்டிருந்துள்ளார். சாப்பிட சென்றால் மனுதாரரை நகை அவரது மாமியார் நகை கொண்டு வராத உனக்கு

என்ன சாப்பாடு என்று அவமானப்படுத்தியும் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாமல் போனபோது என்னை எல்லாம் அழைக்காதே என திட்டியதாகவும் நீ பெற்றதற்கு நான் ம ருத்துவமனைக்கு அழைத்து செல்லவேண்டுமா? என்று கூறி அடித்து வீட்டிற்குள் அடைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். பின்னர் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் உதவியுடன் பெற்றோர் வீட்டிற்கு தப்பித்து சென்றதாக பின்னர் அவருடைய பெற்றோர்கள் எதிர்மனுதாரருடன் சேர்த்து வைக்கும் முயற்சிகள் அனைத்தும் வீணாகிபோனது. எதிர்மனுதாரர் ஓசூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.251/2021 என்ற வழக்கை தாக்கல் செய்தார். அதன் நகலை பெற்றுக்கொண்டு ஆஜர் ஆகி சேர்ந்து வாழ விரும்புவதாகவும் ஓசூரில் எதிர்மனுதாரருடைய குடும்பத்தினருடன் குழந்தையுடன் வாழ பயமாக இருப்பதாகவும் திருநெல்வேலியில் உள்ள அவர்களது பூர்வீக வீட்டில் வாழ தயாராக இருப்பதாகவும் மனுதாரர் கூறியுள்ளார். அதற்கு எதிர்மனுதாரர் திருநெல்வேலியில் வரமுடியாது என்று சொன்னதால் மீடியேசன் செல்ல நிலுவையில் இருக்கிறது. பின்னர் அந்த மனுவை எதிர்மனுதாரர் வாபஸ் பெற்றுக்கொண்டு அந்த விவரங்கள் அனைத்தையும் மறைத்து விவாகரத்து பரிகாரம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். திருமணமான நாளிலிருந்து மனுதாரர் மற்றும்அவரது குழந்தைக்கு எந்த ஒரு தொகையும் கொடுத்ததில்லை. பராமரிக்கவில்லை. எதிர்மனுதாரர் ஓசூரில் உள்ள சந்திரசேகரா மருத்துவமனையில் ரூ.40,000/- ஊதியம் பெறுகிறார். பல்வேறு முதலீடுகள் மூலமாகவும், திருநெல்வேலியில் உள்ள வீட்டின் வாடகையின் மூலமும் மாதம் ரூ.30,000 மும் மொத்தம் ரூ.70,000.-ற்கும் மேலாகவும் மாத வருமானம் ஈட்டி வருகிறார். மனுதாரர் தன்னைத்தானே பராமரிக்க முடியாமல் வயதான பெற்றோருடன் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். குழந்தைக்கு மற்றும் மருத்துவ செலவு மாதம் ரூ.12,000/ற்கான மாத பராமரிப்பு மற்றும்

மருத்துவச் செலவுகள் என மாதம் ரூ.18,000/-மும் மொத்தமாக ரூ.30,000/- செலவாகிறது. வழக்கு நடத்த ரூ.30,000/-தேவைப்படுவதாக இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்க இந்த மனு தாக்கல் செய்துள்ளார்

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்**

மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சங்கதிகள் உண்மையல்ல. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 16.05.2019 ம் தேதி பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டு திருமணத்திற்கு முன்பு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த எதிர்மனுதாரர் பின்பு உணவு சரிவராத காரணத்தினால் ஓசூர் வேலைக்கு சென்றதாகவும் தான் ஒரே பையன் என்பதால் வேலை தயார் செய்து திருமணம் முடிந்து மனுதாரரை அழைத்து செல்வதாக கூறி தான் நிச்சயம் செய்யப்பட்டது. திருநெல்வேலி மருத்துவமனையில் பணிபுரிந்ததாகவும் திருநெல்வேலி பாளையங்கோட்டை தில்லை கூத்தனார் தெருவில் உள்ள வீட்டில் வசிப்போம் என்று கூறியதாலேயே எதிர்மனுதாரரின் பெற்றோர் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டனர் என்பது உண்மையல்ல. எதிர்மனுதாரருடைய பெற்றோர் வற்புறுத்தலின் பேரில் எதிர்மனுதாரரின் பெற்றோர் அவர்களது சேமிப்பு போக அக்கம் பக்கத்தினரிடம் கடன் வாங்கி 15 பவுன் நகை மற்றும் 2 லட்சம் மதிப்பிலான சீர் வரிசை பொருட்கள் கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல. மனுவில் கண்ட சங்கதிகள் உண்மையல்ல. எதிர்மனுதாரரின் தாயார் தகப்பனார் இருவரும் நோய்வாய் பட்ட நபர்கள் மனுதாரர் முழுவதும் போனிலேயே அதிக நேரம் செலவிடுவது காலையில் வேலைக்கு செல்லும் போது உணவு தயார் செய்து கொடுப்பது கிடையாது. வீட்டில் தூய்மை இல்லாமல் இருந்து வேலைக்கு சென்றவின் எழுந்திருப்பது சாப்பாடு கேண்டீன் மூலம் வாங்கிவர சொல்வது என்று இந்த

பெண்ணுக்குரிய பக்குவம் இல்லாத நிலையில் இருந்து வந்துள்ளார். மேலும் வருமானம் மீறி அன்றாட செலவுக்கு கூட கடன் வாங்கி வாழும்நிலைக்கு எதிர்மனுதாரர் இருந்துள்ளார். மனுதாரர் ஸ்ரீ சந்திரசேகரா மருத்துவமனையில் ரூ.21,800 சம்பளம் பெற்று வருகிறார். எதிர்மனுதாரர்அம்மாவுக்கு இருதய ரத்த நலன்கள் உறைவு நோய் காரணமாக தொடர்ந்து சிகிச்சை செய்து வந்ததால் மருத்துவ செலவுக்காக பல்வேறு இடங்களில் கடன் பற்றுள்ளார். அதனை எதிர்மனுதாரர் வருமானம் மூலம் உதவி செய்ய முடியாததால் எதிர்மனுதாரரின் சகோதரியின் கணவர் மூலம் எடன் தொகை செலுத்தி தில்லை கூத்தனார் தெருவில் உள்ள வீட்டினை சகோதரிக்கு எதிர்மனுதாரர் அப்பாவின் சுயசம்பாத்தியம் வீட்டினை எதிர்மனுதாரர் அப்பாவால் கொடுத்தார். எதிர்மனுதாரரின் அப்பா கால் சதை வலி காரணமாக அரசு சித்த மருத்துவமனை முருகன் குறிச்சி பாளையங்கோட்டையில் வைத்தியம் பார்த்து கால் பக்கவாத நோயாளியாக இருக்கிறார். ரூ.10,00,000/- கொடுக்க வேண்டிய காரணத்தினால் வீட்டினை சகோதரியிடம் ஒப்படைத்துவிட்டார்கள். மனுதாரர் மாத வாடகை ரூ.10,000/- செலுத்தி வருகிறார். knee synovectomy surgery அதிக நேரம் நின்று வேலை செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்.மருத்துவமனையில் வேலை செய்து வருவதால் மெடிக்கல் ரெப் நண்பர் மூலம் ஓசூர் மெட் பிளஸ் வழங்கக்கூடிய சலுகை அடிப்படையில் மாதம் ரூ.2000 மருந்து வாங்கிக்கொண்டு இருக்கிறார். மனுதாரர் சொல்வது போல் எதிர்மனுதாரருக்கு வருமானம் கிடையாது. மனுதாரர் Bsc பட்டதாரி ஆகையால் தபால் அலுவலகத்தில் தற்காலிக வேலை பாத்தும் முக்கிய வணிக நிறுவனத்தில் மாதம் ரூ.17000 சம்பளம் பெற்று வருகிறார். மனுதாரர் விவசாய நிலம் உள்ளது. சொந்த வீட்டில் தான் வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரர் வாடகை வீட்டில் தான் உள்ளார். எனவே எதிர்மனுதாரர் கேட்டுள்ள பரிகாரம் வழங்கும் நிலை

இல்லை. குழந்தைக்கு வழக்கிற்கு முன்பு கொடுத்து வந்த மாத செலவு தொகை உறவினர் மூலம் நேரில் கொடுத்து வந்ததால் அதற்காக ஆவணமாக தாக்கல் செய்ய இயலவில்லை என்பது உண்மை. எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் வயதானவர்கள் அவர்களால் மனுதாரரையோ எதிர்மனுதாரரையோ பராமரிக்க முடியவில்லை. மருத்துவ செலவுகளுக்கு ரூ.12,000 சொல்வது உண்மை அல்ல. எதிர்மனுதாரருக்கு சாப்பாட்டுக்கு மாதம் ரூ.5000 ஆகிறது. எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புகிறார். எதிர்மனுதாரர் குழந்தையை பார்க்க அனுமதி கேட்டு மனுதாரர்அதனை மறுத்து வருகிறார். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

4. இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றவாணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரருக்கு மனுப்பரிகாரம் கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்.

**7. -** இரு தரப்பு வாதவுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பெரியோர்கள் முன்னிலையில் இந்து சமுதாய முறைப்படி திருமணம் நடந்தது. திருமணத்தின் பயனாய் இருவருக்கும் காவியதர்சினி என்ற பெண் பிள்ளை இருந்து வருகிறது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. மனுதாரரிடம் விவாகரத்து பரிகாரம் கேட்டு எதிர்மனுதாரர் பிரதான மனுவை தாக்கல் செய்துள்ளார். திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் சென்னையில் உள்ள மருத்துவ மனையில் வேலை பார்த்து வந்துபின்னர் திருநெல்வேலியில் உள்ள மருத்துவமனையில்

வேலை பார்த்து வந்ததாகவும் எதிர்மனுதாரரின் தங்கை பெங்களூரில் வசித்து வந்ததால் அவரை அடிக்கடி பார்ப்பதற்காக எதிர்மனுதாரரும் அவரது பெற்றோரும் எதிர்மனுதாரருக்கு ஓசூரில் வேலை கிடைத்ததாக பொய் சொல்லி மனுதாரரையும் அவர்களுடன் அழைத்துச் சென்றுள்ளார்கள் என்றும் அங்கு எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தியும் அதிக வரதட்சனை கேட்டு மனுதாரரை ஏசி , பேசி உடல் ரீதியாகவும், மன ரீதியிாகவும் கொடுமை செய்து வீட்டை விட்டு வெளியேற்றினார் என்றும் அதனைத்தொடர்ந்து தன் குழந்தைகளுடன் தனது பெற்றோர் வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும் எதிர்மனுதாரர் ஓசூரில் உள்ள சந்திரசேகரா மருத்துவமனையில் ரூ.40,000/- ஊதியம் பெறுகிறார். பல்வேறு முதலீடுகள் மூலமாகவும், திருநெல்வேலியில் உள்ள வீட்டின் வாடகையின் மூலமும் மாதம் ரூ.30,000 மும் மொத்தம் ரூ.70,000.-ற்கும் மேலாகவும் மாத வருமானம் ஈட்டி வருகிறார் என்றும் மனுதாரர் தன்னைத்தானே பராமரிக்க முடியாமல் வயதான பெற்றோருடன் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும் குழந்தைக்கு மற்றும் மருத்துவ செலவு மாதம் ரூ.12,000/ற்கான மாத பராமரிப்பு மற்றும் மருத்துவச் செலவுகள் என மாதம் ரூ.18,000/-மும் மொத்தமாக ரூ.30,000/- செலவாகிறது என்றும் வழக்கு நடத்த ரூ.30,000/-தேவைப்படுவதாக சொல்லியுள்ளார். எனவே தனக்கும் குழந்தைகளுக்கும் மாதாந்திர ஜீவனாம்சமாக ரூ.12,000/- மற்றும் ரூ.18,000/மும் வழக்கு நடத்த செலவுத்தொகையாக ரூ.30,000/-மும் இடைக்கால ஜீவனாம்சம் வழங்க கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**8**. எதிர்மனுதாரர் /மனுதாராரின் வயதான தாய் தந்தையருக்கு இருதய நோய் மற்றும் ரத்த நாலன்கள் உறைவு நோய் காரணமாக தொடர்ந்து சிகிச்சை செய்து வந்ததால் மருத்துவ செலவுக்கு பல்வேறு இடங்களில் கடன் கேட்டு கிடைக்காததால் எதிர்மனுதாரரின்

தங்கையின் கணவர் உதவியின்பேரில் கடன் பெற்று சிகிச்சை மேற்கொண்டு வருவதாகவும் எதிர்மனுதாரருக்கு தற்போது சாப்பாடு செலவு மட்டும் 5000 ஆகிறது என்றும் எதிர்மனுதாரர் மனுதாரரோடு வாழ தயாராக இருந்தும் மனுதாரர் தான் வன்மம் கொண்டு காலம் கடத்தி வருவதாகவும் எதிர்மனுதாரருக்கு மாத சம்பளம் ரூ.21,800/- என்பது ஓசூரில் ஸ்ரீசந்திரசேகரா மருத்துவமனையில் பணியில் சம்மன் மூலம் கொடுத்துள்ள சம்பள தொகையே உறுதிப்படுத்தி வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாகவும் தற்போது வரை எதிர்மனுதாரர் அவரது பெற்றோருடன் வசித்து வருவதாகவும் மனுதாரருடன் வாழ தயாராக இருப்பதாகவும் எதிர்மனுதாரர் வழக்கில் வாய்தா தேதிகளிலோ அல்லது விடுமுறை நாட்களிலோ குழந்தையை பார்க்க அனுமதி கேட்டும் மனுதாரர் மறுத்து வருவதாகவும் கூறி இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுள்ளார்.

**9**. உபய தரப்பில் வாதுரை கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் ஓசூரில் ராமச்சந்திரா மருத்துவமனையில் வேலை பார்த்து வருகிறார் என்பது உபய தரப்பினரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதே சமயம் திருமணத்தின் பயனாக காவிய தர்சினி என்ற பெண் பிள்ளை உள்ளதாகவும் மனுதாரருக்கும் அவரது குழந்தைக்கும் எந்தவித பராமரிப்பு செலவையும் எதிர்மனுதாரர் செய்யவில்லை என்று மனுதாரர் கூறியுள்ளார். தனது பெற்றோர் வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாக மனுதாரர் கூறியுள்ளார். இந்த எதிர்மனுதாரர் ஓசூரில் தனியார் மருத்துவமனையில் வேலை பார்த்து ரூ.40,000/-மும் திருநெல்வேலியில் உள்ள வீட்டின் வாடகை மூலம் ரூ.30,000/- ஆக மொத்தம் ரூ.70,000/- வருமானம் வருவதாக சொல்லியுள்ள போதிலும் அதனை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. இடைக்கால ஜீவனாம்சம் பொறுத்தவரை மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் சட்டப்படியான திருமணம் என்றும் மனுதாரர்

எதிர்மனுதாரருடைய மனைவி என்ற வகையிலும் எதிர்மனுதாரர் அவரை பராமரிக்க கடமைப்பட்டவர் என்பதும் பிரதானமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விசயமாகும். எதிர்மனுதாரர் மாத வருமானம் ரூ.21,800/- என எதிருரையில் குறிப்பிட்டிருந்தாலும் ஆவணம் வழியாக நிரூபிக்கவில்லை. இருப்பினும் மனுதாக்கல் செய்த காலத்திலிருந்து இன்றுவரை எதிர்மனுதாரர் மனுதாரரின் பராமரிப்பு செலவிற்கு ஏதும் கொடுக்கவில்லை. மனு சங்கதிகளை மற்றும் சூழ்நிலைகளை ஆராய்கையில் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழும்பட்சத்தில் அவரது வாழ்க்கை தரம் எவ்வாறு இருந்திருக்குமோ அதற்கு ஈடான ஒரு வாழ்க்கை அளிக்க எதிர்மனுதாரர் கடமைப்பட்டவராகிறார். எனவே இந்நீதிமன்றம் மனுதாரருடைய அவசிய தேவைகாளான உணவு உடை உறைவிடம் ஆகிய தேவைகளுக்காக மனுதாரர் மற்றும் அவருடைய குழந்தையின் உணவு, உடை மருத்துவ செலவுக்காக இந்த எதிர்மனுதாரர் கணவர் மற்றும் தகப்பன் என்ற முறையிலும் அவர்களை பராமரிக்க கடமைப்பட்டவர் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில் இந்த மனுவை அனுமதித்து, மனுதாரர் மற்றும் அவரது குழந்தைக்காகவும் மாதாந்திர ஜீவனாம்சமாக ரூ.10,000/-(மட்டும்) எதிர்மனுதாரர் ஒவ்வொரு ஆங்கில மாதம் 5ம் தேதிக்குள் நேரடியாகவோ, பணவிடை மூலமாகவோ அஞ்சல் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ அல்லது வேறு சரியான நடவடிக்கை மூலமாகவோ வழங்கிட வேண்டுமென்றும், மேலும், மனுதாரருக்கு வழக்கு செலவுத்தொகையாக ரூ.5,000/-மும் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**

**திருவைகுண்டம்**

**உபய தரப்பு சாட்சி : இல்லை**

**உபய தரப்பு சாண்றாவணங்கள்-இல்லை**

**சார்பு நீதிபதி,**

**திருவைகுண்டம்**

சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

I.A.No.1/2025

இன்

HMOP.No.33/2024

உத்தரவு

நாள்13.10.2025.